**சுவிஸ் தமிழர்இல்லம்**

**அனைத்துலக ரீதியில் நடாத்தும் தமிழீழ கிண்ணத்திற்கான**

# தமிழர் விளையாட்டு விழா 2018

**தமிழீழக்கிண்ணம்-2018**

Sportanlage Deutweg und Talgut, Winterthur, Zürich. 11 / 12 – Aug.2018 Saturday - Sunday

தமிழர் விளையாட்டு விழா-2018 ஆரம்ப நிகழ்வாகிய, கொடியேற்றல், கொடிவணக்கம், அகவணக்கம் நிகழ்வுகளின் போது, மைதானத்திற்கு வருகை தந்திருக்கும், வீரர்கள், கழகங்கள் மற்றும் அனைவரும் தமது சீருடைகளுடன் ஆரம்ப நிகழ்வு நடைபெறும் இடத்தில் பிரசன்னமாயிருத்தல் அவசியம். தவறும் பட்சத்தில் குறித்த வீரர்கள், கழகங்கள் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான தகைமையிழந்தவர்களாக கருதப்படுவர்.

ஏற்பாட்டுக்குழு
தமிழர் விளையாட்டு விழா-2018

## உதைபந்தாடச் சுற்றுப்போட்டி –
## அறிவுறுத்தல்களும் விதிமுறைகளும் - வளர்ந்தோர், 21 வயதுப்பிரிவு

1. சீரற்ற காலநிலை மற்றும் தவிர்க்க முடியாத காரணங்கள் இருப்பின் சுற்றுப் போட்டியின் நேரஅட்டவணை, ஆட்ட நேரம்,மைதானம் போன்றவற்றில் மாற்றம் செய்யும் உரிமை சுற்றுப்போட்டி அமைப்பாளருக்கு உண்டு.

2. மைதானஅளவு **100 x 64.** பந்து இலக்கம் **5**

3. போட்டிகள் 11 பேர் கொண்டதாக நடாத்தப்படும். 16 வீரர்களின் பெயர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

4. **ஆட்டத்திற்கான பந்தை இரு அணிகளும் கொண்டுவருதல் வேண்டும். பொருத்தமான பந்தினை நடுவர் தீர்மானிப்பார்**

5. வளர்ந்தோர் பிரிவில் 2003 ற்கு பின் பிறந்தவர்கள் (15 வயதிற்குட்பட்டவர்கள்) விளையாட அனுமதியில்லை.

6. வயதுப்பிரிவுகள் பிறந்த ஆண்டினை அடிப்படையாகக்கொண்டு அமையும். குறித்த வயதுப்பிரிவு வீரர் அந்த ஆண்டின் ஜனவரி 1ம் திகதிக்குப் பின்னர் குறித்த வயதை பூர்த்தி செய்தவராக இருத்தல் வேண்டும். (உ-ம்: 21 வயதுப்பிரிவு 1997 அல்லது அதற்குப்பின் பிறந்தவராக இருத்தல் வேண்டும்.

7. **வெளிநாடுகளில் இருந்து கலந்துகொள்ளும் அணிகளில், அந்தந்த நாட்டு வீரர்கள் மட்டுமே விளையாட அனுமதி உண்டு. வேறு நாடுகளில் இருந்து வீரர்கள் இணைத்துக்கொள்வதாயின், முன்அனுமதி பெறப்படுதல் வேண்டும்.**

8. இரண்டாவது ஆட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் பெயர்ப்பட்டியல் பூரணமாக (முழுப்பெயர்) நிரப்பப்பட்டு அனுமதிக்கட்டணத்துடன் அலுவலகத்தில் ஒப்படைத்தல் வேண்டும்.

9. போட்டியானது குறிப்பிட்ட நேரத்திற்கு ஆரம்பமாகும். ஆரம்ப நேரத்தில் பிரத்தியேக அழைப்பு விடப்படமாட்டாது. குறித்த நேரத்தில் இருந்து 5 நிமிடத்திற்குள் அணிகள் மைதானத்தில் சமூகமளிக்காவிடில், இரு அணிகளுக்கும் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. ஒரு அணி சமூகம் தந்திருக்கும் பட்சத்தில், 3:0 என்ற முறையில் புள்ளிகள் வழங்கப்படும்.

10. வீரர்கள் காற்கவசம், இலக்கமிடப்பட்ட ஒரே நிறத்திலான சீருடை அணிந்திருத்தல் வேண்டும்.

11. **அணித்தலைவர் தனக்கான கைப்பட்டியை அணிந்திருத்தல் வேண்டும்.**

12. நிர்வாகத் தொடர்புகள் யாவும், கழகப்பொறுப்பாளருக்கூடாகவே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

13. குழுநிலைத் தெரிவின் போது இரு அணிகள் சம புள்ளிகளைப் பெற்றிருப்பின், அடித்த கோல்களில் இருந்து வாங்கிய கோல்களை கழித்தல் எனும் அடிப்படையிலும், தொடர்ந்தும் சமநிலை காணப்படின், அதிக கோல்களை போட்ட அணி எனும் அடிப்படையிலும், தொடர்ந்தும் சமநிலை காணப்படின், குறித்த இரு

அணிகளும் குழுநிலையில் ஆடியபோது வெற்றி பெற்ற அணி தெரிவாகும். அதிலும் சமநிலையெனின் தண்டனை உதை மூலம் வெற்றி-தோல்வி தீர்மானிக்கப்படும்.

14. மூன்று அணிகள் சமநிலையில் இருப்பின் தலா 5 தண்டனை உதை வழங்கப்பட்டு வெற்றி தோல்வி தீர்மானிக்கப்படும்.(**ஐந்தும் முழுமையாக அடிக்கவேண்டும்**). தண்டனை உதையிலும் சமநிலை காணப்படின் அடித்த கோல்களில் இருந்து வாங்கிய கோல்களைக் கழித்தல் என்னும் அடிப்படையிலும் அதிலும் சமநிலை காணப்படின் அதிக கோல்களைப் போட்ட அணி தெரிவாகும். தொடர்ந்தும் சமநிலை காணப்படின் 3 தண்டனை உதை வழங்கப்படும்.அதிலும் சமநிலை காணப்படின் நாணயச் சுழற்சி மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்படும்

    A vs B = 5.4    A vs C = 3.4    B vs C = 5.4

    A – 3 புள்ளிகள்  B – 3 புள்ளிகள்  C – 3 புள்ளிகள்

| | அடித்தது | வாங்கியது | **வித்தியாசம்** |
|---|---|---|---|
| A | 5+3 = 8 - | 4+4 = 8 - | 0 |
| B | 4+5 = 9 - | 5+4 = 9 - | 0 |
| C | 4+4 = 8 | 3+5 = 8 | 0 |

15. காலிறுதிப் போட்டி சமநிலையில் முடிவுற்றால், நேரடியாக தண்டனைஉதை மூலம் வெற்றி-தோல்வி தீர்மானிக்கப்படும்.

16. அரையிறுதிப் போட்டி, இறுதிப்போட்டி என்பன சமநிலையில் முடிவுற்றால், 2தடவைகள் 5நிமிட மேலதிக நேரம் வழங்கப்படும். தொடர்ந்தும் சமநிலை காணப்படின், தண்டனைஉதை மூலம் வெற்றி-தோல்வி தீர்மானிக்கப்படும். தண்டனை உதைக்காக பந்துக்காப்பாளரை மாற்றமுடியும்.

17. ஆட்டத்தின்போது நடுவரின் தீர்ப்பே இறுதியானது. இதற்கு மாறாக மைதானத்தில் கலகத்தில் ஈடுபடுதலோ, ஆட்டத்தினை இடைநிறுத்தி வெளியேறுதலோ அனுமதிக் கப்படமாட்டாது. இவ்வாறு நடந்துகொள்ளும் அணிகள் தொடர்ந்து நடைபெறும் மூன்று சுற்றுப்போட்டிகளிலும் அடுத்த ஆண்டு தமிழீழக் கிண்ணத்துக்கான சுற்றுப்போட்டியிலும் கலந்துகொள்வதற்கான அனுமதி மறுப்பினைப் பெறும்

    - **வெளிநாட்டில் இருந்து கலந்து கொள்ளும் அணிகள் அடுத்த ஆண்டு இச்சுற்றுப்போட்டியில் கலந்துகொள்வதற்கான அனுமதி மறுப்பினைப் பெறும்.**

18. ஆட்டத்தின்போதோ, ஆட்டம் நடைபெற்று முடிந்த பின்னரோ தங்கள் கழக வீரர்களாலோ, ஆதரவாளர்களாலோ சுற்றுப்போட்டிக்கோ, நடாத்துனருக்கோ இடையூறு ஏற்படாவண்ணம் பார்த்துக்கொள்ளும் முழுப்பொறுப்பும் கழகத்தையே சாரும். இவர்களால் அசம்பாவிதங்கள் ஏதும் நிகழ்ந்தால் குறித்த கழகம் தொடர்ந்து நடைபெறும் மூன்று சுற்றுப்போட்டிகளிலும் அடுத்த ஆண்டு தமிழீழக் கிண்ணத்துக்கான சுற்றுப்போட்டியிலும் கலந்துகொள்வதற்கான அனுமதி மறுப்பினைப் பெறும்.

    - **வெளிநாட்டில் இருந்து கலந்து கொள்ளும் அணிகள் அடுத்த ஆண்டு இச்சுற்றுப்போட்டியில் கலந்துகொள்வதற்கான அனுமதி மறுப்பினைப் பெறும்.**

19. மைதானத்தில் நடுவரின் தீர்ப்பை மீறி வீரர்/அணி/ஆதரவாளர்கள் நடுவரைத் தாக்க முற்பட்டால் குறித்த நபர் மைதானத்தை விட்டு வெளியேற்றப்படுவதுடன் தொடர்ச்சியாக மூன்று சுற்றுப்போட்டிகளில் கலந்துகொள்வதற்கு அனுமதி மறுக்கப்படும். அத்துடன் அபராதமாக 200 சுவிஸ் பிராங்குகள் விதிக்கப்படும்

- **வெளிநாட்டில் இருந்து கலந்து கொள்ளும் அணிகள் அடுத்த ஆண்டு இச்சுற்றுப்போட்டியில் கலந்துகொள்வதற்கான அனுமதி மறுப்பினைப் பெறும்.**

20. மதுபானம் மைதான வளாகத்தில் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.
21. வீரர்கள் மதுபானம், போதைப் பொருள் போன்றவற்றை உட்கொண்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் குறித்த அணி தனது வெற்றி வாய்ப்பினை இழப்பதோடு, குறித்த வீரர்/வீரர்கள் அச்சுற்றுப்போட்டி முழுவதிலும் விளையாட அனுமதி மறுக்கப்படுவதோடு குற்றப்பணமாக குறித்த கழகம் 600.- சுவிஸ்-பிறாங்குகளை செலுத்த வேண்டும்.
22. மதுபானம், போதைப்பொருள் பரிசோதனை எந்நேரமும் மைதான பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுகின்றவர்களால் மேற்கொள்ளப்படலாம்.
23. எதிரணி சம்பந்தமான ஆட்சேபமனு, தங்களுக்கிடையில் நடைபெற்ற போட்டி முடிவடைந்து பத்து நிமிடங்களுக்குள் ஆதாரங்களுடன் இதற்கென உரிய 'பாதுகாப்பு முறைப்பாட்டுப் படிவம்' பூர்த்திசெய்யப்பட்டு பிணைப்பணமாக 20 சுவிஸ் பிறாங்குகள் சேர்த்து தாக்கல் செய்யப்படவேண்டும். முறைப்பாட்டின் பெறுபேறு முறைப்பாட்டாளருக்கு சாதகமாக இருப்பின்பிணைப்பணம் மீளளிக்கப்படும். பாதகமாக இருப்பின் பிணைப்பணம் மீளளிக்கப்படமாட்டாது
24. **போட்டியின்போது இரு அணிகளினதும் சீருடைகள் ஒரே நிறமானதென நடுவர் தீர்மானிப்பரேயானால் போட்டி நிரலில் இரண்டாவதாக இருக்கும் அணி தனது சீருடையை மாற்றவேண்டும். பதிலாக வேறு நிறத்திலான மாற்று சீருடை அல்லது பொருத்தமான மேலங்கியினை தயாராக வைத்திருத்தல் வேண்டும்.**

**மஞ்சள் / சிவப்பு அட்டை**

25. பிறழ்-நடத்தை (ஒழுக்கவீனம்) காரணமாக சிகப்பு அட்டை மூலம் வெளியேற்றப்படும் வீரர், குறித்த ஆட்டத்திற்குப் பின்னர் வரும் இரண்டு ஆட்டங்களில் பங்குபற்றுவதற்கான அனுமதி மறுப்பைப் பெறுவர்.
26. விதிமுறை மீறல் சிகப்பு அட்டை பெற்று வெளியேறும் வீரர் அடுத்து வரும் அவர் அணிக்கான ஆட்டத்தில் பங்குபற்றுவதற்கான அனுமதி மறுப்பைப் பெறுவர்.
27. 21வயது மற்றும் வளர்ந்தோர் பிரிவிற்கான ஆட்டத்தின்போது இருவேறு ஆட்டங்களில் மஞ்சள் அட்டை பெற்றிருப்பின் அவரது அணி ஆடும் அடுத்த ஆட்டத்திலும் பங்குபற்ற முடியாது.
28. வீரர்கள், மேலதிக வீரர்கள், ஆதரவாளர்கள் வன்முறைச்செயற்பாடுகளில் ஈடுபட்டால் சிகப்பு அட்டை மூலம் மைதானத்தை விட்டு வெளியேற்றப்படுவதுடன், சுற்றுப்போட்டி முழுவதும் விளையாடுவதற்கான அனுமதி மறுக்கப்படும்.
29. சுவிஸ் தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளனம், மற்றும் இளந்தமிழர் உதைபந்தாட்ட சம்மேளனம் என்பவற்றின் அங்கத்துவ அணிகளில் அங்கத்துவம் பெறாத வீரர்கள் வெளிநாடுகளிலிருந்து கலந்துகொள்ளும் அணிகளுக்காக விளையாட முடியும்.
30. இறுதி ஆட்டங்களில் கலந்துகொண்ட இரு கழகங்களும் தங்கள் சீருடையுடன் வந்தே வெற்றிக் கிண்ணங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
31. ஆட்டத்தின் நடுவர்களாக சுவிஸ் உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் நடுவர்களே கடமையாற்றுவர். எந்தெந்த ஆட்டத்திற்கு யார்யார் நடுவர்கள் என்பதையும் அவர்களே தீர்மானிப்பர். நடுவர்களை மாற்றக்கோரும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**ஏற்பாட்டுக் குழு**
**தமிழர் விளையாட்டு விழா-2018**